RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
www.malaithanthi.in
DAILY EVENING
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 227 | ஆகஸ்டு 22, 2026 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# “கார் வாங்குவதில் காட்டும் வேகத்தை குறுவை தொகுப்பில் காட்டாதது ஏன்?” - உதயநிதி

சென்னை: ஆக.22-

‘குறுவை சிறப்புத் தொகுப்பு அறிவிக்கப்பட்டு 2 மாதங்கள் கடந்துவிட்ட பிறகும், விவசாயிகளை அது சென்று சேராமல் இருப்பது கடும் கண்டனத்துக்குரியது. குறுவை தொகுப்பு நிதி விவசாயிகளுக்குச் சென்று சேர இந்த விவசாயிகள் விரோத அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்’ என்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘மேட்டூர் அணையில் இருந்து ஜூன் 12-ஆம் தேதி தண்ணீர் திறக்காத காரணத்தால், குறுவை சாகுபடி பொய்த்துவிட்டது. விவசாயிகளுக்கு அரசு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என்று பேரவையில் பேசி இருந்தேன்.

வறட்சி நிவாரணம் பற்றிக் கேட்டதற்கு, குறுவை சிறப்புத் தொகுப்புக்காக நிதி ஒதுக்கியதைப் பற்றி முதல்வர் விளக்கினார். ஆனால்,



அவர் ஒதுக்கியதாக சொன்ன அந்த நிதியும் இன்று வரை விவசாயிகளைச் சென்றடையவில்லை.

இது தொடர்பான செய்திகள் ஊடகங்களில் வெளியாகியுள்ளன. அவற்றை இந்த திறமையற்ற அரசு கவனித்ததா? அல்லது வழக்கம்போல விவசாயிகள் பிரச்சினையில் அலட்சியம் காட்டுகிறதா?

எம்.எல்.ஏ.க்களுக்குக் கார் வாங்குவதில் காட்டும் வேகத்தை, விவசாயிகளுக்கான நிதியைக் கொண்டு சேர்ப்பதில் இந்த அரசு காட்டியிருக்க வேண்டும்.

விவசாயிகள் நலனில் அக்கறையின்றி தொடர்ந்து மெத்தனப் போக்கோடு நடந்து கொள்வது ஏற்புடையது அல்ல. குறுவை சிறப்புத் தொகுப்பு நிதி விவசாயிகளுக்குச் சென்று சேர இந்த விவசாயிகள் விரோத அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்’ எனத் தெரிவித்துள்ளார்.

## “குறுவை தொகுப்பில் அலட்சியம் காட்டுவதா?”; தமிழக அரசுக்கு டிடிவி.தினகரன் கண்டனம்

சென்னை, ஆக.22-

“இரண்டு மாதங்கள் கடந்தும் குறுவை தொகுப்பு விவசாயிகளைச் சென்றடையவில்லை. சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு கார் வாங்குவதில் காட்டும் குதிரை வேகத்தை விவசாயிகளின் நலனில் காட்டத் தயங்குவது ஏன்?” என்று அமமுக பொதுச்செயலாளர் டிடிவி.தினகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், “குறுவை சாகுபடிக்காக ஜூன் 12-ஆம் தேதி மேட்டூர் அணையைத் திறக்க முடியாத சூழலில், தமிழகம் முழுவதும் உள்ள டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் குறுவை சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில், 134 கோடி ரூபாய் மதிப்பில் முதவல்வர் விஜய்யால் அறிவிக்கப்பட்ட குறுவை தொகுப்பு இன்று வரை வந்துசேரவில்லை என விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.

குறுவை சாகுபடி மற்றும் அதனையொட்டி நடைபெறும் பணிகளுக்காக வழங்க வேண்டிய குறுவை தொகுப்பு, குறுவை சாகுபடியே முடிவடைந்து அறுவடை செய்யும் தருவாயிலும் வழங்காமல் காலம் தாழ்த்திக் கொண்டிருக்கும் தவெக அரசின் அலட்சியப் போக்கு, ஒட்டுமொத்த விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் மேலும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

இயந்திரங்களின் மூலம் நடவு செய்ததற்கான ரசீதுகள் உட்பட அனைத்து ஆவணங்களுடன் கூடிய விண்ணப்பங்களை சமர்ப்பித்து இரண்டு மாதங்கள் கடந்தும், விவசாயிகளுக்கான நிதியை விடுவிக்காமல் காலம் தாழ்த்திக் கொண்டிருப்பது, டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்ட விவசாயிகளின் நலனுக்காக அறிவிக்கப்பட்ட குறுவைத் தொகுப்பின் நோக்கத்தையே சிதைக்கும் அளவிற்கான அவல நிலையை உருவாக்கியுள்ளது.

ஏற்கெனவே, வேளாண் கடன்களை முழுமையாகத் தள்ளுபடி செய்வதாக அளித்த வாக்குறுதியையும் தவெக அரசு முழுமையாக நிறைவேற்றாமல் விவசாயிகளை வஞ்சித்து வரும் நிலையில், சாகுபடிச் செலவு அதிகரிப்பு, இடுபொருட்களின் விலை உயர்வு, விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்காதது எனப் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து வரும் விவசாயிகளுக்கு, குறுவை தொகுப்பையும் உரிய நேரத்தில் வழங்காமல் காலம் தாழ்த்துவது, விவசாயிகளை வஞ்சிக்கும் செயலாகும்.

எனவே, விவசாயிகளின் வாழ்வாதாரத்துடன் தொடர்புடைய இந்தக் குறுவைத் தொகுப்புத் திட்டத்தில் அலட்சியம் காட்டாமல், அரசு அறிவித்த குறுவை தொகுப்பு முழுமையாகவும், உடனடியாகவும் விவசாயிகளைச் சென்றடையத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, விவசாயிகளுக்கு அளித்த முழுமையான வேளாண் கடன் தள்ளுபடி வாக்குறுதியையும் தாமதமின்றி நிறைவேற்றி, விவசாயிகளின் கடன் சுமையிலிருந்து அவர்களை விடுவிக்க வேண்டும் என தவெக அரசை வலியுறுத்துகிறேன்.” எனத் தெரிவித்துள்ளார்.

## மாணவர் போராட்டம் குறித்த சர்ச்சை சுற்றறிக்கை: தலைமைச் செயலர் மீது நடவடிக்கை கோரும் பெ.சண்முகம்

சென்னை, ஆக.22-

“அடுத்தடுத்து இடதுசாரிகள் குறிவைக்கப்படுவதைத் தற்செயலானது என எடுத்துக் கொள்ள முடியாது. தமிழக முதல்வரும் அரசும் தம் நிலையைத் தெளிவுபடுத்த வேண்டும். இடதுசாரிகள் போராட்டத்தில் மாணவர்கள் பங்கேற்கக் கூடாது என சுற்றறிக்கை வெளியிட்ட தலைமைச் செயலாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.” என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் தெரிவித்தார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “இடதுசாரி மாணவர் இயக்கங்களைக் குறி வைத்ததன் மூலம் தலைமை செயலாளரின் சித்தாந்த சாய்மானம் அம்பலப்பட்டு நிற்கிறது. அரசு எந்திரத்தை அவரது நோக்கத்திற்காக தவறாக பயன்படுத்தும் எல்லைக்கு அவர் சென்றிருக்கிறார்.

நியாயமான நிர்வாகத்தை இனிமேலும் அவரிடம் இருந்து எதிர்பார்க்க முடியாது. கடிதத்தின் ‘பொருள்’ இடதுசாரி இயக்கங்கள் குறித்து இருந்தாலும், உள்ளடக்கத்தில், மாணவர்களின் போராட்ட உரிமைகளையே அடக்கி ஒடுக்கும் எதேச்சதிகார மனோபாவமே அதில் பிரதிபலிக்கிறது.

இது மிக ஆபத்தானது. ஒன்றிய அரசின் பாணியை அடியொற்றி எடுக்கப்பட்ட நடவடிக்கையாகவே கருத வேண்டியிருக்கிறது. இது முதல்வரின் அனுமதியுடன் நடந்ததா என்கிற கேள்வி எழுகிறது. கல்லூரி கல்வி இயக்குநர் தம் சுற்றறிக்கையைத் திரும்பப் பெற்றிருக்கலாம்.

ஆனால், சட்டம் ஒழுங்கு ஆய்வுக் கூட்டத்தின் முடிவும், அதனை அறிவுறுத்தி தமிழக அரசின் சிறப்புச் செயலாளர் அனுப்பிய கடிதமும் நீடிக்கின்றன. உயர் கல்வித் துறை செயலாளர், கல்லூரி கல்வி இயக்ககம் தவிர, மற்ற இயக்ககங்களோ, பல்கலைக்கழகங்களோ இந்த சுற்றறிக்கையை அனுப்பவில்லை என்று பத்திரிகைக்குக் கூறியிருப்பதாக தகவல் உள்ளது.

ஆனால், தமிழக அரசின் சிறப்பு செயலாளரின் கடிதம், கல்லூரி கல்வி இயக்ககம், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பப்பட்டு, சென்னை பல்கலைக்கழக பதிவாளர் மூலம் அனைத்து கல்லூரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அவையும் இன்னு ம் திரும்பப் பெறப்படவில்லை.

‘டாப் பிரையாரிட்டி, மோஸ்ட் இம்மீடியட்’ என்ற வார்த்தைகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரம் குறித்த அறிக்கை (action taken report) கோரப்பட்டுள்ளதானது, எவ்வளவு தீவிரத் தன்மையுடன் திட்டமிட்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்பதைக் காட்டுகிறது. எனவே, கல்லூரி கல்வி இயக்ககம் மட்டுமே தவறு செய்தது என்பது உண்மையல்ல. எய்தவரை விட்டு விட்டு அம்புகளை மட்டும் நோவதில் பயனில்லை.

இப்பிரச்சினை சட்டமன்றத்தில் எழுப்பப்பட்டபோது, உயர்கல்வித்துறை அமைச்சர் அளித்த விளக்கமானது முற்றிலும் நிராகரிக்கப்பட வேண்டியதாகும். கல்வி வளாக அமைதி மாணவர்கள் போராட்டத்தை ஒடுக்குவதில் தான் இருக்கிறதா என அவர் விளக்க வேண்டும். சில வார்த்தைகள் தவறாக வந்துவிட்டன என்கிறார். மொத்த உள்ளடக்கமே மோசமானது என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக்காட்டுகிறது.

குஜிலியம்பாறை வட்டாட்சியர் பிரச்சினையிலும் சட்டப்பேரவையில் வருவாய்த்துறை அமைச்சர், நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்.

ஆனால், மாவட்ட ஆட்சியரின் குறிப்பு, பயிற்சி முடிந்து விட்டதால் பேரிடர் மேலாண்மை ஆணையரகத்தில் பணியில் சேர்வதற்காக சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் விடுவிக்கப்பட்டதாகக் கூறுகிறது. பயிற்சி முடிந்த பின் விடுவிக்கப்பட்டு, வேறு பணியில் சேர்வதற்கு பெயர், தவெக ஆட்சியில், நடவடிக்கையா? அடுத்தடுத்து இடதுசாரிகள் குறிவைக்கப்படுவதைத் தற்செயலானது என எடுத்துக் கொள்ள முடியாது.

தமிழக முதல்வரும் அரசும் தம் நிலையைத் தெளிவுபடுத்த வேண்டும். தலைமைச் செயலாளர் அப்பதவியில் நீடிக்கத் தகுதியற்றவர் என்ற முறையில் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குஜிலியம்பாறை வட்டாட்சியர் மீது முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி நாளைய தினம் தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் வலிமையான கண்டனம் முழங்க வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவல் விடுக்கிறது. அனைத்து தரப்பினரும் ஆதரவு தெரிவிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறது” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்கா செல்ல மத்திய அரசு அனுமதி மறுப்பு: தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி சாடல்

புதுடெல்லி, ஆக.22-

அமெரிக்கா செல்ல மத்திய அரசு அனுமதி மறுத்துள்ளதாக தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி குற்றம் சாட்டியுள்ளார்.



தற்போது இங்கிலாந்து தலைநகர் லண்டனில் உள்ள ரேவந்த் ரெட்டி, அங்கிருந்து அமெரிக்காவின் பாஸ்டன் நகருக்குச் செல்ல திட்டமிருந்தார். அமெரிக்கப் பயணத்தை முடித்துக்கொண்டு வரும் 30ம் தேதி ஹைதராபாத் திரும்ப அவர் திட்டமிட்டிருந்தார்.

இந்நிலையில், ரேவந்த் ரெட்டியின் அமெரிக்கப் பயணத்துக்கு மத்திய அரசு மறுப்பு தெரிவித்துள்ளதை அடுத்து அவர் ஆகஸ்ட் 23-ம் தேதியே லண்டனில் இருந்து ஹைதராபாத் திரும்ப உள்ளதாக தெலங்கானா முதல்வர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தெலங்கானா முத ல்வர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், “ரேவந்த் ரெட்டியின் அதிகாரப்பூர்வ குழு இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவுக்கு செல்ல மாநில அரசு சார்பில் மத்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டது.

இங்கிலாந்து பயணத்துக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டது. முதல்வர் தலைமையிலான குழு இங்கிலாந்து சென்ற பிறகே, மத்திய அரசு அமெரிக்கா செல்வதற்கான அனுமதியை மறுத்தது. அரசியல் ரீதியில் அனுமதி மறுக்கப்படுவதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ள நிலையில், ரேவந்த் ரெட்டி தலைமையிலான குழு தனது அமெரிக்கப் பயணத்தை ரத்து செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

உலகின் சிறந்த கல்வி நிறுவனங்களை இந்தியாவுக்கு; தெலங்கானாவுக்கு; குறிப்பாக ஹைதரா பாத்துக்குக் கொண்டு வருவதே இந்த பயணத்தின் ஒரே நோக்கமாக இருந்தது. சிறந்த உலகளாவிய நிறுவனங்களிடமிருந்து கல்வி மற்றும் பயிற்சியைப் பெற வேண்டும் என்ற நமது இளைஞர்களின் விருப்பங்களுக்கு அவை ஒரு தீர்வாக அமைந்திருக்கும்.

தேசத்தை கட்டியெழுப்புதல் மற்றும் இளைஞர்களின் எதிர்காலம் என்று வரும்போது, அரசியல் மற்றும் தேர்தல்களுக்கு அப்பால் நாம் சிந்திக்க வேண்டும்,” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## “சுரங்கங்கள், கனிமங்கள் சட்டத்திருத்தத்தை திரும்பப் பெறுக”; மத்திய அரசுக்கு இந்திய கம்யூ. வலியுறுத்தல்

சென்னை, ஆக.22-

“மாநில உரிமைகளைப் பறித்து பெருநிறுவனங்கள் இயற்கை வளங்களை கொள்ளை யடிக்க வழி வகுக்கும் சுரங்க ங்கள் மற்றும் கனிமங்கள் மேம்பாட்டு மற்றும் ஒழுங்குமுறை சட்டத்திருத்தத்தை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும்” என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், “மாநில உரிமைகளைப் பறித்து பெருநிறுவனங்கள் இயற்கை வளங்களை கொள்ளையடிக்க வழிவகுக்கும் மத்திய பாஜக அரசு கொண்டு வந்துள்ள சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மேம்பாட்டு மற்றும் ஒழுங்குமுறை சட்டத்திருத்தம் 2026-ஐ ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும்.

இந்தச் சட்டத்தின் மூலம் கனிம வளங்கள் மீது மாநிலங்களுக்கு உள்ள வரி, செஸ் மற்றும் பிற வருவாய் அதிகாரங்கள் அனைத்தையும் கட்டுப்படுத்தும் உரிமை ஒன்றிய அரசுக்கு வழங்கப்படுகிறது. இச்ச ட்டத்திருத்தம் மாநி லங்களின் வருவாய் உரிமையை பறிப்பதுடன் நிதி சுயாட்சியையும் கடுமையாக பாதிக்கச் செய்யும்.

இச்சட்டம் வெறும் கனிம வளம் தொடர்பான பிரச்சினை மட்டுமல்ல, அரசியல் அமைப்புச் சட்டம் மாநிலங்களுக்கு வழங்கியுள்ள அதிகார ங்களையும், நிதி உரிமைகளையும் படிப்படியாக பறிக்கும் ஒன்றிய அரசின் திட்டத்தின் ஒரு பகுதியாகும். இயற்கை வளங்களை கொள்ளையடிக்கும் பெரு நிறுவனங்களுக்கு இச்சட்டத்திருத்தம் வாய்ப்பளிக்கும். இயற்கை வளங்களை ஒன்றிய அரசின் அதிகாரத்தின் கீழ் மையப்படுத்த இச்சட்டத்திருத்தம் வழிவகுக்கிறது.

2026-ம் ஆண்டு சுதந்திர தின உரையில் பிரதமர் நரேந்திர மோடி, அரியவகை கனிமங்களின் உலகளாவிய விநியோகச் சங்கிலி அதற்கான முதலீடு மற்றும் கடல்சார் வளங்களை வேகமாகப் பயன்படுத்துதல் ஆகியவற்றை இந்தியாவின் எதிர்கால வளர்ச்சிக்கான முக்கிய இலக்குகளாக அறிவித்தார். இதற்கு சில நாட்களுக்கு முன்பே, ஆகஸ்ட் 12 அன்று மக்களவையும், ஆகஸ்ட் 13 அன்று மாநிலங்களவையும் இந்த சட்டத்திருத்த மசோதா 2026-ஐ நிறைவேற்றியுள்ளன.

உச்ச நீதிமன்றத்தின் 2024-ஆம் ஆண்டு தீர்ப்பு, மாநிலங்களுக்கு உள்ள கனிம உரிமைகள் தொடர்பான வரி அதிகாரத்தை உறுதி செய்துள்ளது. இந்நிலையில் இத்தகைய சட்டக் கட்டுப்பாட்டை ஒன்றிய பாஜக அரசு கொண்டு வருவது, மாநிலங்களின் அதிகாரத்தை நயவஞ்ச கத்தை சட்டத்தின் மூலம் குறைக்கும் செயலாகும்.

மத்திய அரசு இதனை சமச்சீராக்குதல், சுரங்கத்துறை முதலீட்டு க்கு உதவுதல் என நியாயப்படுத்துவதை ஏற்க முடியாது. கார்ப்பரேட்டுகளின் கொள்ளை லாபத்திற்காக மாநிலங்களின் நிதி அதிகாரத்தைப் பறிப்பது தேச விரோதச் செயலாகும்.

கனிம வளம் நிறைந்த மாநிலமான தமிழ்நாட்டின் வருவாயை மிகப்பெரிய அளவிற்கு இச்சட்டத்திருத்தம் பாதிக்கும். மாநில இயற்கை வளங்கள் மீது கொள்கைரீதியான முடிவெடுக்கும் உரிமை யையும், கனிம வளங்களிலிருந்து கிடைக்கும் வருவாயை மாநில மக்களின் வளர்ச்சிக்குப் பய ன்படுத்தும் பொருளாதார மற்றும் நிதிசார் தன்னாட்சியையும் இச்சட்டத்திருத்தம் பாதிப்படையச் செய்யும்.

கனிம வளங்கள் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கான லாபத்திற்கானது அல்ல; அவை இயற்கையான மக்களின் பொதுச் சொத்து ஆகும். அவற்றின் பயன்பாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மக்கள் நலன், உள்ளூர் மக்களின் உரிமைகள், மாநில நலன் மற்றும் சமூக நீதியை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

இச்சட்டம் பழங்கு டியினர் மற்றும் பாரம்பரியமாக வனங்களில் வாழும் மக்களின் நிலம், வாழ்வாதாரம், பாரம்பரிய உரிமைகளை பாதிக்கும். இயற்கை வளங்களின் மீதான அவர்களின் உரிமைகளை பாதிக்கும்.

குறிப்பாக வன உரிமைகள், சட்டம் 2006 வழங்கும் சமூக மற்றும் தனி நபர் வன உரிமைகள், கிராம சபையின் ஒப்புதல் மற்றும் பங்கேற்பு ஆகியவற்றை பாது காக்காமல், சுரங்க திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பது பழங்குடியினர் மற்றும் பாரம்ப ரியமாக வனங்களில் வாழும் மக்களின் அரசியலமைப்புச் சட்டரீதியான உரிமை களுக்கும், வாழ்வாதார பாதுகாப்பிற்கும் எதிரானதாகும்.

எனவே, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மேம்பாட்டு மற்றும் ஒழுங்கு முறை சட்டத்திருத்தம் 2026, ஐ தமிழ்நாடு அரசு கடுமையாக எதிர்க்க வேண்டும். இச்சட்டத்திருத்தத்தை உடனடியாக திரும்பப் பெற வேண்டுமென, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு ஒன்றிய பாஜக அரசை வலியுறுத்துகிறது.” எனத் தெரிவித்துள்ளார்.




# தாம்பரத்தில் உலக புகைப்பட தின விழா மற்றும் விருது வழங்கும் நிகழ்ச்சி

தாம்பரம் ஆக்.22-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அருகே உலக புகைப்பட தினத்தை முன்னிட்டு புகைப்படக் கலைஞர்களை கௌரவிக்கும் வகையில் விருது வழங்கும் விழா, தாம்பரம் மப்பேடு பகுதியில் உள்ள மணி மினி மஹால் அரங்கில் ஆகஸ்ட் 19ஆம் தேதி சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியை தமிழ்நாடு புகைப்படக் கலைஞர்கள் சுய உதவிக்குழு தலைவர் முனைவர் கோபி ஏற்பாடு செய்திருந்தார். செயலாளர் இ.எம்.அர்ஜித், பொருளாளர் வி.விமலா மற்றும் மக்கள் தொடர்பாளர்கள் எம்.ஆர்கே.வேணு, இ.ஞானமூர்த்தி ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக மாண்புமிகு த.சரத்குமார், மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் மற்றும் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர், திரைப்பட இசையமைப்பாளர் கலைமாமணி தினா, தமிழ்நாடு வீடியோ போட்டோகிராபர்ஸ் அசோசியேஷன் தலைவர் கடலூர் முத்து, திரைப்பட இயக்குநர் CT பாண்டி, ஒளிப்பதிவாளர் ஜி.கனகராஜ், தாம்பரம் SHG C.O. திவ்யா சீனிவாசன், வாகை ALF தலைவர் G. கலைவாணி, CRP ராஜலக்ஷ்மி, CRP திவ்யா உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விழாவில் சிறப்பாக பணியாற்றிய புகைப்படக் கலைஞர்களுக்கு சிறப்பு விருதுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. புகைப்படத் துறையின் முக்கியத்துவம், புகைப்படக் கலைஞர்களின் பங்களிப்பு மற்றும் அவர்களின் தொழில் சார்ந்த வளர்ச்சி குறித்து சிறப்பு அழைப்பாளர்கள் பேசினர்.

நிகழ்ச்சியை விஜய் டிவி புகழ் சரவெடி சரவணன் சிறப்பாக தொகுத்து வழங்கினார். விழாவில் TPSHG மற்றும் TVPF செயற்குழு உறுப்பினர்கள், பொது உறுப்பினர்கள் மற்றும் புகைப்படக் கலைஞர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் தமிழ்நாடு புகைப்படக் கலைஞர்கள் சுய உதவிக்குழு தலைவர் தாம்பரம் முனைவர் கோபி நன்றி தெரிவித்தார்.



# வடசென்னை மாவட்டம் அம்பத்தூர் எஸ்டேட் துணை கிளை மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி வார வழிபாட்டு மன்றத்தில் கஞ்சிக்களையம் நிகழ்ச்சி

மாதவரம், ஆக.22-

வடசென்னை மாவட்டம் அம்பத்தூர் எஸ்டேட் துணை கிளை மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி வார வழிபாட்டு மன்றத்தில் கஞ்சிக்களையம் நிகழ்ச்சி குமார்சக்தி கிளைமன்றம் வழிகாட்டுதலின்படி சுசிலா- நாகலிங்கம் தலைமை மற்றும் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. மஹாலட்சுமி- விஜயகுமார் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் அம்மன் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு பல்வேறு சிறப்பு பூஜைகள் செய்து வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு அம்மன் போற்றி முழுங்க மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் சக்தியடியார்கள் உமாராணி, லாவண்யா, இந்துமதி, உமாமகேஷ்வரி, ஜகத்பிரபு, புவனேஸ்வரி, சுதர்சனன், ராஜேஷ்வரி சூரியா, முருகன்ஜெய்ந்தி, அம்பிகாமுரளி, சற்குணம்மாள், சுமதிபாரத்குமார், சுகுமார், பாலசரவணன், ருஷீக், மவுரியா, தபஷ்வினி, ரித்வீன் உள்ளிட்ட பக்தர்கள் கலந்துகொண்டு உலகமக்கள் நன்மைகள் வேண்டியும் மற்றும் தங்களது நேர்த்திக்கடன் பூர்த்தியடைய வேண்டியும் தனது இருகரங்களில் கஞ்சிக்களையம் சட்டியினை ஏந்தியவாறு வழிபாட்டு மன்றத்தை வளம்வந்து அம்மனுக்கு கஞ்சிக்களையம் சிறப்பு பூஜைகள் செய்து தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து சுற்றுவட்டார பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு மங்கள பொருட்களுடன் கஞ்சியினை வழங்கினர். இதில் ஏராளமான சக்தியடியார்கள், பொதுமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



# குன்னூர் எம்ஜிஆர் நகர் திருக்கோவில் 50-ம் ஆண்டு பொன்விழா

நீலகிரி, ஆக.22-

நீலகிரி மாவட்டம் குன்னூர் நகர பகுதியில் உள்ள எம்ஜிஆர் நகர் மக்கள் சார்பில் ஆண்டு தோறும் திருக்கோவில் விழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதில் ஐம்பதாவது பொன்விழா ஆண்டாக கொண்டாடப்பட்டு வருகிறது. செல்வகணபதி, சங்கிலி முனீஸ்வரர், முருகன், முத்தாலம்மன், நாகம்மாள் ஆலய கோவில் விழா கடந்த11-ம் தேதி துவங்கியது. இதனைத் தொடர்ந்து,16-ம் தேதி முத்தாலம்மன், நாகம்மாள் திருக் கல்யாணம் நடைபெற்றதை தொடர்ந்து மகளிர் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது. பின்னர் 18 -ம் தேதி தந்தி மாரியம்மன் கோவிலில் இருந்து பால்குடம் ஊர்வலமாக கொண்டு வரப்பட்டு அம்மனுக்கு அபிஷேகம் செய்யப்பட்டது பின்னர் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டன. அடுத்த நாள் அம்மனுக்கு பொங்கல் வைக்கப்பட்டு கிடா வெட்டி அனை வருக்கும் விருந்து வழங்கப்பட்டது. நேற்று இளைஞரணி சார்பில் தீர்த்தக் கூட ஊர்வலம் நடந்தது இதனை தொடர்ந்து அனைவருக்கும்

கறி விருந்து வழங்க ப்பட்டது.விழாவில் இறுதி நிகழ்ச்சியாக ஊர் பொது மக்கள் சார்பில் மாபெரும் அன்ன தானம் மற்றும் வி எம் ஆர் பைனான்ஸ் அதிபர் பழனிச்சாமி, தமிழ்மணி குடும்பத்தார் சார்பில் இன்னிசை நிகழ்ச்சி மற்றும் கண்களை கவரும் வான வேடிக்கை நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை ஊர் பொதுமக்கள், கோவில் கமிட்டி நிர்வாகிகள், இளைஞர் அணி மற்றும் மகளிர் அணியை சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் செய்திருந்தனர்.



# கிருஷ்ணகிரியில் கோரிக்கைகளை நிறைவேற்றிட வலியுறுத்தி செவிலியர்கள் ஆர்ப்பாட்டம்

கிருஷ்ணகிரி, ஆக.22-

கிருஷ்ணகிரியில் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றிட வலியுறுத்தி செவிலியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கிருஷ்ணகிரி அடுத்த போலுப்பள்ளி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில், தமிழ்நாடு அரசு நர்சுகள் சங்கம் மற்றும் செவிலியர் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 7ம் தேதி முதல் கட்ட ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதையடுத்து நேற்று இரண்டாம் கட்ட போராட்டம் செவிலியர்கள் ஸ்ரீதேவி, சேது, லட்சுமி, சுதாகர் மற்றும் பாலமுருகன் ஆகியோர் தலைமையில் நடந்தது. ஆர்ப்பாட்டத்தில், மறு பணி அமர்த்தும் ஆட்குறைப்பு தொடர்பான அரசாணை எண். 204ஐ உடனே ரத்து செய்ய வேண்டும். தொகுப்பூதிய முறையை முற்றிலும் ரத்து செய்து, தொகுப்பூதியத்தில் பணிபுரியும் அனைத்து செவிலியர்களையும் உடனே பணி நிரந்தம் செய்ய வேண்டும். 'ஸ்டாப் நர்ஸ்' என்ற பதவி பெயரை 'நர்சிங் ஆபீஸர்' என பெயர் மாற்றம் செய்து, செவிலியர்களுக்கான பணி விளக்க அரசாணையை உடனே வெளியிட வேண்டும். செவிலியர் போதகர் பணிக்கு ஒப்பந்த நியமனத்தை கைவிட வேண்டும். காலியாக உள்ள பணியிடங்களை உடனே நிரப்ப வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன கோஷங்களை எழுப்பினர்.




# பழனியில் தமிழக வெற்றி கழகம் மற்றும் அதிதி பவுண்டேஷன் சார்பில் போதை இல்லா தமிழகம், விழிப்புணர்வு பேரணி

திண்டுக்கல், ஆக.22-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் அதிதி பவுண்டேஷன் மற்றும் தமிழக வெற்றிக்கழகம் சார்பில் கல்லூரி மாணவர்களுடன் இணைந்து போதையில்லா தமிழகம் என்ற விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழக வெற்றி கழகம் மற்றும் கல்லூரி மாணவர்கள் பொதுமக்கள் என 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இதில் போதையில்லா எதிர்காலம் படைப்போம் மக்கள் நலம் காப்போம் , போதையை ஒழித்து மக்கள் நலன் காப்போம் என்ற வாசகங்கள் பொருந்திய பதாகைகளை ஏந்தியவாறு பேரணி நடைபெற்றது.

இதில் தமிழக வெற்றி கழக பொறுப்பாளர்கள் கார்த்திக் ராஜா, பழனிபாலன், நாகராஜ் , அதிதி பவுண்டேஷன் புவனேஸ்வரி மற்றும் சிறப்பு விருந்தினர்களாக மருத்துவர்கள் பன்னீர்செல்வம், கல்பனா பன்னீர்செல்வம், ஏ பி ஏ கல்லூரி முதல்வர் ரவிசங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் பேசிய புவனேஸ்வரி தமிழ்நாட்டின் முதல்வர் ஜோசப் விஜய் போதையில்லா தமிழ்நாடு உருவாக வேண்டும் என கூறியதை நாம் பின்பற்றுவோம் என கூறினார்.

முன்னதாக பேரணியானது ஏ பி ஏ கல்லூரியில் தொடங்கி நீதிமன்றம், அரசு மருத்துவமனை, வழியாக பழனி பேருந்து நிலையத்தை சென்றடைந்தது.

# வரும் 25ம் தேதி குறைதீர்வு கூட்டம்

தேனி ஆக.22-

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், .செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

தேனி மண்டலத்தில், தேனிமாவட்டத்திற்குட்பட்ட பேரூராட்சிகளில் பணிபுரிந்து ஓய்வுப் பெற்றப் பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள குறைகள் தொடர்பாக, பேரூராட்சிகள் இயக்குநர் அவர்களின் தலைமையில் 25.08.2026 அன்று முற்பகல் 11.00 மணிக்கு காணொளிக் காட்சி வாயிலாக குறைதீர்வு கூட்டம் நடைபெற உள்ளது.எனவே,ஓய்வூதியப் பயன்கள் தொடர்பான குறைகள் நிலுவையில் உள்ள ஓய்வுப் பெற்ற பேரூராட்சிப் பணியாளர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களது குறைகளைத் தெரிவித்து தீர்வு பெறலாம். இக்குறைதீர் கூட்டத்தில் கலந்து கொள்ள விரும்பும் ஓய்வுப் பெற்ற பணியாளர்கள் தேனி மண்டலத்திற்குட்பட்ட பேரூராட்சி அலுவலகம் அல்லது தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு நேரில் ஒரு மணி நேரம் முன்னதாக கலந்து கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைர் மரு.இரா.வைத்திநான், தெரிவித்துள்ளார்.




# தமிழகத்தில் ஆக.27 வரை மிதமான மழைக்கு வாய்ப்பு

சென்னை. ஆக.22-

தமிழகத்தில் நாளை முதல் ஆக.27-ம் தேதி வரை ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழக கடலோரப் பகுதிகளில் கீழ்மட்ட வளிமண்டலத்தில் ஒரு பலவீனமான காற்றழுத்தத் தாழ்வுப் பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் நாளையும் (ஆக.22), நாளை மறுதினமும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

ஆகஸ்டு 24, 25 தேதிகளில் கோவை மாவட்ட மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும். இதர மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

ஆகஸ்டு 26, 27 தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழையும், இதர தமிழகத்தில் லேசான மழையும் பெய்யக்கூடும்.

தமிழகத்தில் நாளையும், நாளை மறுதினமும் உள் தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக மயிலாடுதுறை மாவட்டம் மணல்மேடு, கொள்ளிடத்தில் தலா 7 செமீ, புதுச்சேரி பாகூர், கடலூரில் தலா 6 செமீ, திருப்பூர் தெற்கில் 5 செமீ, தஞ்சாவூர் மாவட்டம் வெட்டிக்காடு, திருப்பூர், மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி ஆகிய இடங்களில் தலா 4 செமீ மழை பதிவாகியுள்ளது.

# மேகமலையில் அதிகார துஷ்பிரயோகத்தை கைவிட வேண்டும் CPI ML. மாஸ் லைன் தேனி மாவட்ட செயலாளர் கோரிக்கை

தேனி ஆக.22-

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) மாஸ் லைன் தேனி மாவட்ட குழு சார்பில், மாவட்ட செயலாளர் ஜோதி பாண்டிகண்ணன் விடுத்துள்ள கண்டன அறிக்கையில், மேகமலை பகுதியில் நீண்டகாலமாக வாழ்ந்து வரும் மலைவாழ் மக்கள், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் வகையிலும், ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு துணை ராணுவம் அனுப்பப்படும் என உச்ச நீதிமன்றத்தின் எச்சரிக்கை கடும் கண்டனத்துக்குரியது. பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி என்ற பெயரில் அப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்வுரிமையையும், வாழ்வாதார உரிமையையும் பறிக்கும் நடவடிக்கைகளை தமிழக அரசு உடனடியாக கைவிட வேண்டும்.

மேகமலை பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்றால், சட்டத்தின் அடிப்படையிலும், உரிய விசாரணை மற்றும் முறையான நடைமுறைகளின் அடிப்படையிலும் மட்டுமே நடவடிக்கை எடுக்க வேண்டும். உண்மையான ஆக்கிரமிப்புகள் எவை, நீண்டகாலமாக அப்பகுதியில் வசித்து வரும் மக்களின் குடியிருப்புகள் மற்றும் வாழ்வாதார நிலங்கள் எவை என்பதனை முழுமையாக ஆய்வு செய்யாமல் பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் நடவடிக்கை எடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும், மேகமலைப் பகுதியில் பணிபுரிந்து வரும் தொழிலாளர்கள் மற்றும் அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்தவொரு குடும்பமும் வாழ்விடத்தையும், வாழ்வாதாரத்தையும் இழக்கும் நிலை ஏற்படக் கூடாது.



உச்சநீதிமன்றத்தின் உத்தரவுகளை காரணம் காட்டி, அதிகாரிகள் தன்னிச்சையாகவும் மனிதநேயமற்ற முறையிலும் நடவடிக்கை எடுப்பதை அனுமதிக்க முடியாது. நீதிமன்ற உத்தரவுகளை அமல்படுத்தும்போதும், அப்பகுதி மக்களின் சட்டப்பூர்வ உரிமைகள் மற்றும் வாழ்வாதாரத்தை பாதுகாப்பது அரசின் கடமையாகும்.எனவே, மேகமலை பகுதியில் நடைபெறும் அதிகார துஷ்பிரயோகத்தை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும். சட்டவிரோத ஆக்கிரமிப்புகள் தொடர்பாக வெளிப்படையான முறையில் விசாரணை நடத்த வேண்டும்.

நீண்டகாலமாக அப்பகுதியில் வசிக்கும் மக்களின் குடியிருப்பு மற்றும் வாழ்வாதார உரிமைகளை பாதுகாக்க வேண்டும். பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்வாதார பிரச்சினைகளுக்கு மனிதநேயமான தீர்வு காண வேண்டும்.

அப்பகுதியில் நடைபெறும் நடவடிக்கைகள் குறித்து மாவட்ட நிர்வாகமும், தமிழக அரசும் உரிய விளக்கம் அளிக்க வேண்டும்.

பொதுமக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தி, பாதிக்கப்பட்ட மக்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

மேகமலை மக்களின் வாழ்வுரிமைக்காகவும், வாழ்வாதார உரிமைக்காகவும் CPI (ML) மாஸ் லைன் தொடர்ந்து குரல் கொடுக்கும். மக்கள் உரிமைகளை பறிக்கும் எந்த நடவடிக்கைக்கும் எதிராக ஜனநாயக ரீதியான போராட்டங்களை முன்னெடுக்கும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது,

மாலை தந்தி

சனிக்கிழமை 22.08.2026

# காவேரிப்பட்டினம் ஸ்ரீ வெங்கடேஸ்வர பெருமாள் கோயிலில் வருஷ பூர்த்தி வைபவம் : அக்னி குண்ட பூஜையில் திரளான பக்தர்கள் பங்கேற்பு





கிருஷ்ணகிரி, ஆக.22-

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் அரச மரத் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ வெங்கடேஸ்வர பெருமாள் திருக்கோயிலில் கும்பாபிஷேகம் நடைபெற்று ஓராண்டு நிறைவடைந்ததையொட்டி, வருஷ பூர்த்தி வைபவம் மற்றும் அக்னி குண்ட பூஜை விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

வருஷ பூர்த்தி வைபவத்தை முன்னிட்டு கோயில் வளாகத்தில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதனைத் தொடர்ந்து வேத மந்திரங்கள் முழங்க யாகசாலை பூஜைகள், அக்னி குண்ட பூஜைகள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் பக்தி பரவசத்துடன் நடைபெற்றன.

இதையொட்டி ஸ்ரீ வெங்கடேஸ்வர பெருமாளுக்கு பல்வேறு திரவியங்களால் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. தொடர்ந்து பெருமாளுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு, மகா தீபாராதனை நடைபெற்றது. சிறப்பு அலங்காரத்தில் ஸ்ரீ வெங்கடேஸ்வர பெருமாள் பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

கோயிலில் நடைபெற்ற அக்னி குண்ட பூஜை மற்றும் சிறப்பு பூஜைகளை ஏராளமான பக்தர்கள் பக்தியுடன் கண்டு தரிசனம் செய்தனர். காவேரிப்பட்டினம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு சுவாமியை வழிபட்டனர்.

விழா முழுவதும் பக்தர்கள் "கோவிந்தா... கோவிந்தா..." என பக்தி முழக்கங்களை எழுப்பியதால் கோயில் வளாகம் ஆன்மிக அதிர்வால் நிறைந்தது. பின்னர் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

விழாவிற்கான ஏற்பாடுகளை திருக்கோயில் நிர்வாகத்தினர் மற்றும் விழாக்குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர். பக்தர்கள் சிரமமின்றி தரிசனம் செய்வதற்கான தேவையான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. வருஷ பூர்த்தி வைபவம் பக்தர்கள் பங்கேற்புடன் சிறப்பாக நடைபெற்று நிறைவடைந்தது.

# அருந்ததி கட்சியின் சார்பில் சுதந்திரப் போராட்ட வீரர் தாத்தா முத்துவீரன் (எ) ஒண்டிவீரன் அவர்களின் 255-வது நினைவு நாள் கருத்தரங்கக் கூட்டம்



சென்னை, ஆக.22-

சென்னைராயப்பேட்டை ஓட்டல் செர்மானியில், அருந்ததி கட்சியின் சார்பில் சுதந்திரப் போராட்ட வீரர் தாத்தா முத்துவீரன் (எ) ஒண்டிவீரன் அவர்களின் 255-வது நினைவு நாள் கருத்தரங்கக் கூட்டம் நடைபெற்றது. வழக்கறிஞர் பி.புருசோத்தமன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில், பல்வேறு அரசியல் கட்சிகள், சமூக அமைப்புகள் மற்றும் தோழமை இயக்கங்களின் தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டு ஒண்டிவீரன் அவர்களின் வீரத்தையும் சமூகப் பங்களிப்பையும் நினைவுகூர்ந்து சிறப்பித்தனர்.

இக்கருத்தரங்கில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் ரவிந்திரநாத், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணைய உறுப்பினர் எஸ்.செல்வகுமார், அம்பேத்கர் மக்கள் படை நிறுவனர் தலைவர் டாக்டர் மு.மதிபறையனார், தலித் விடுதலை இயக்கத் தலைவர் தலித் கிச்சா, பீம் இந்தியா ஒருங்கிணைப்பாளர் இரா. பீம்குமார், தலித் விடுதலை இயக்க பொதுச்செயலாளர் தலித் நதியா, தயா அமைப்பு மாநில பொதுச்செயலாளர் செங்கை புல்லட் செ. சத்தியா, தயா அமைப்பு மாநில செயலாளர் மற்றும் தாட்கோ பிரிவு பொறுப்பாளர் க.தங்கமுத்து, பாதுகாப்புக் குழு மற்றும் தயா அமைப்பு மாநில செயலாளர் மீனம் எஸ்.சேகர், பல்லாவரம் தொகுதி செயலாளர் மற்றும் சமூக செயற்பாட்டாளர் எஸ்.லோகேஷ், தயா அமைப்பு அச்சரப்பாக்கம் தொகுதி செயலாளர் தேவகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும், டாக்டர் அம்பேத்கர் பகுத்தறிவு இளைஞர் இயக்கம் பல்லாவரம் மாநில தலைவர் கே.சுப்ரமணி, அவ்வியக்கத்தின் பொருளாளர் எஸ். ஆரோக்கியசாமி, செங்கல்பட்டு மாவட்ட பகுஜன் சமாஜ் கட்சி மாவட்ட தலைவர் எஸ். நீலகண்டன் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும் தோழமை இயக்கங்களின் தலைவர்கள், பிரதிநிதிகள் கலந்து கொண்டு கருத்தரங்கிற்கு சிறப்பு சேர்த்தனர்.

கருத்தரங்கில் ஒண்டிவீரன் அவர்களின் வரலாறு, வீரச் செயல்கள், சமூக நீதிக்கான பங்களிப்பு மற்றும் அவரது நினைவை அடுத்த தலைமுறையினரிடம் கொண்டு செல்வதன் அவசியம் குறித்து பல்வேறு கருத்துகள் பகிரப்பட்டன.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து தோழமை இயக்கங்கள், அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கு அருந்ததி கட்சியின் சார்பில் நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

அருந்ததி கட்சி ஆலோசகர் சி.முனுசாமி வரவேற்புரை ஆற்றினார்.

இக்கருத்தரங்கில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் ரவிந்திரநாத், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணைய உறுப்பினர் எஸ். செல்வகுமார், தலித் விடுதலை இயக்கத் தலைவர் தலித் கிச்சா, அம்பேத்கர் மக்கள் படை நிறுவனர் தலைவர் டாக்டர் மு.மதிபறையனார், பீம் இந்தியா ஒருங்கிணைப்பாளர் இரா.பீம்குமார், தலித் விடுதலை இயக்க பொதுச்செயலாளர் தலித் நதியா, தயா அமைப்பு நிறுவனர் இரா. அருண்குமார், மாநில பொதுச்செயலாளர் செங்கை புல்லட் செ. சத்தியா, மாநில செயலாளர் மற்றும் தாட்கோ பிரிவு பொறுப்பாளர் க.தங்கமுத்து, பாதுகாப்புக் குழு மற்றும் தயா அமைப்பு மாநில செயலாளர் மீனம் எஸ்.சேகர், பல்லாவரம் தொகுதி செயலாளர் மற்றும் சமூக செயற்பாட்டாளர் எஸ். லோகேஷ், அச்சரப்பாக்கம் தொகுதி செயலாளர் தேவகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும், டாக்டர் அம்பேத்கர் பகுத்தறிவு இளைஞர் இயக்கம் பல்லாவரம் மாநில தலைவர் கே.சுப்ரமணி, அவ்வியக்கத்தின் பொருளாளர் எஸ். ஆரோக்கியசாமி, செங்கல்பட்டு மாவட்ட பகுஜன் சமாஜ் கட்சி மாவட்ட தலைவர் எஸ். நீலகண்டன் மற்றும் அருந்ததி கட்சியின் மாநில நிர்வாகிகள் T. C. கோபி, S. சங்கர், மோகன்ராஜ், ராமலிங்கம், பழனி, வராதராஜன், மதுரை உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும் தோழமை இயக்கங்களின் தலைவர்கள், பிரதிநிதிகள் கலந்து கொண்டு கருத்தரங்கிற்கு சிறப்பு சேர்த்தனர்.

கருத்தரங்கில் ஒண்டி வீரன் அவர்களின் வரலாறு, வீரச் செயல்கள், சமூக நீதிக்கான பங்களிப்பு மற்றும் அவரது நினைவை அடுத்த தலைமுறையினரிடம் கொண்டு செல்வதன் அவசியம் குறித்து மாவீரன் வரலாற்று கையேடு வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து தோழமை இயக்கங்கள், அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கு அருந்ததி கட்சியின் சார்பில் நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

இறுதியில் அருந்ததி கட்சி துணை பொது செயலாளர் வ். மோகன்ராஜ் நன்றியுரை ஆற்றினார்.

# "தாய்லாந்தில் தவிக்கும் 3 தமிழர்களை மீட்க துரித நடவடிக்கை தேவை" - வேல்முருகன்



சென்னை, ஆக.22-

தாய்லாந்தில் சிக்கித் தவிக்கும் தமிழர்கள் மூவரை தாயகம் அழைத்து வர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் வலியுறுத்தியுள்ளர்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "வேலைவாய்ப்பை நம்பி தாய்லாந்து சென்ற திருவள்ளூர் மல்லாவரம் பகுதியைச் சேர்ந்த விஜய், வாலாஜா கோவிந்தசேரி குப்பம் பகுதியை சேர்ந்த யுவராஜ், வேலூர் மருதாளம் பகுதியைச் சேர்ந்த மதன் ஆகிய மூன்று தமிழர்கள், நகரப் பகுதிகளிலிருந்து சுமார் 600 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு அறையில் அடைத்து வைக்கப்பட்டிருப்பதாக அவர்களின் பெற்றோர்களும் உறவினர்களும் தெரிவித்துள்ளனர்.

தங்கள் பிள்ளைகள் எங்கே இருக்கிறார்கள்? எந்த நிலையில் இருக்கிறார்கள்? நாளை என்ன ஆகுமோ என்ற அச்சத்துடன் அவர்களது குடும்பங்கள் தவித்துக் கொண்டிருக்கின்றன.

இந்தக் குடும்பத்தினர் கடந்த 19-ம் தேதி அன்று சென்னை சேப்பாக்கத்தில் உள்ள அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை அலுவலகத்தில் முறையிட்டதுடன், புலம்பெயர் தமிழர் நலத்துறை அமைச்சர் தென்னரசுவிடம் நேரில் சந்தித்து தங்களது கண்ணீர்க் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இந்த விவகாரத்தில் தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிப்பதை வரவேற்கிறோம். ஆனால், மூன்று தமிழர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ள நிலையில், நிர்வாகத்தின் வழக்கமான வேகத்தில் இந்தப் பிரச்சினையை அணுகுவது போதாது. இது ஒரு சாதாரண புகார் அல்ல. மூன்று குடும்பங்களின் நிம்மதி பறிக்கப்பட்டிருக்கிறது. மூன்று பெற்றோர்களின் கண்கள் வாசலில் காத்திருக்கின்றன. மூன்று தமிழர்களின் பாதுகாப்பு தொலைதூர நாட்டில் கேள்விக்குறியாகியுள்ளது.

தமிழக அரசு, மத்திய வெளியுறவுத் துறை, தாய்லாந்தில் உள்ள இந்தியத் தூதரகம், தாய்லாந்து காவல்துறை ஆகியவற்றுடன் தொடர்ச்சியான நேரடி ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி, மூவரின் இருப்பிடத்தை உறுதி செய்து, அவர்களை பாதுகாப்பாக மீட்கப்படுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். அலைபேசி எண்கள் மற்றும் பிற தகவல்களை உடனடியாக ஆய்வு செய்து, அவர்கள் இருக்கும் இடத்தை துல்லியமாக கண்டறிவதற்கான அனைத்து தொழில்நுட்ப வாய்ப்புகளையும் பயன்படுத்த வேண்டும்.

மேலும், அவர்கள் தாயகம் திரும்பும் வரையிலும் குடும்பத்தினருடன் அரசு அதிகாரிகள் தொடர்ச்சியான தொடர்பில் இருந்து, உண்மை நிலவரத்தை அவ்வப்போது உறவினர்களுக்கு தெரிவிக்க வேண்டும். விஜய், யுவராஜ், மதன் ஆகிய மூவரையும் பாதுகாப்பாக மீட்டுத் தாயகம் அழைத்து வர வேண்டும். வெளிநாட்டில் வாழும் தமிழர்களின் நலனுக்காக தனித்துறையும், தனி ஆணையரகமும் செயல்படும் நிலையில், எங்கள் தமிழர் எங்கு சிக்கினாலும் அவர்களை மீட்போம் என்ற நம்பிக்கையை தமிழக அரசு நடைமுறையில் நிரூபிக்க வேண்டிய நேரம் இது.

எனவே, அமைச்சரும் தமிழக அரசும் இந்த விவகாரத்தில் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்தி, உயிருக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படுவதற்கு முன்பாகவே மூன்று தமிழர்களையும் பாதுகாப்பாக மீட்டெடுக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்." என்று வேல்முருகன் வலியுறுத்தியுள்ளார்.



# ஸ்ரீநாகவள்ளி முத்துமாரியம்மன் ஆலயத்தில் உலகமக்கள் நன்மைகள் வேண்டி திருவிளக்கு பூஜை

மாதவரம், ஆக.22-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் நல்லூர் ஊராட்சி ஆட்டந்தாங்கல் கிராமம் மதுர சிவந்தி ஆதித்தன் நகரில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ நாகவள்ளி முத்துமாரியம்மன் ஆலயத்தில் 36-ம் ஆண்டு ஆடிமாத திருவிழா மற்றும் 7-ம் தீமிதி திருவிழாவை முன்னிட்டு உலகமக்கள் நன்மைகள் வேண்டி திருவிளக்கு பூஜை ஆலய நிர்வாகிகள் செயல் தலைவர்கள் கந்தன், சரவணன், மோகன்குமார், செயலாளர் லோகநாதன் , பொருளாளர் பிரபு துணைத்தலைவர்கள் தீனா, காலேந்திரன், விக்னேஷ், சுரேஷ், துணைச்செயலாளர்கள் , சேகர், வினாயகமூர்த்தி, சௌந்தரராஜன், மணிகண்டன், கலையரசன், கௌரவ ஆலோசகர்கள் பாலசுப்பிரமணியம், கஜபதி, ஆலய முன்னாள் காப்பாளர்கள் சிவபெருமாள், சண்முகம், சுப்பையா உட்பட ஆலய அனைத்துநிலை நிர்வாகிகள். கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் அம்மனுக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர்200-க்கும் மேற்பட்ட தாய்மார்கள் திருவிளக்கு பூஜையில் கலந்துகொண்டு உலகமக்கள் நன்மைகள் வேண்டியும் மற்றும் தங்களின் நேர்த்திகடன் பூர்த்தி அடையவேண்டியும் மேளதாளத்துடன் அம்மன் மற்றும் பரிவார தெய்வங்களின் போற்றியுடன் சகஸ்ரநாமம் மந்திரங்களுடன் திருவிளக்கு பூஜை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஆலய அனைத்துநிலை பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு மங்கள பொருட்களுடன் அன்னதானம் வழங்கினர்.

# காவேரி ஆற்று பகுதி சங்கதஹை சேர்ந்த மீன்பிடி உரிமத்தை புதுப்பிக்காத மீனவர்கள் விண்ணப்பிக்க வருகிற செப்.15ம் தேதி கடைசி நாள்

கிருஷ்ணகிரி, ஆக.22-


காவேரி ஆற்று பகுதி சங்கத்தை சேர்ந்த மீன்பிடி உரிமத்தை புதுப்பிக்காத மீனவர்கள், விண்ணப்பிக்க வருகிற செப்.15ம் தேதி கடைசி நாள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: சேலம் மாவட்டம் மேட்டூர் அணை நீர்தேக்க மீனவர்களுக்காக 1956ம் ஆணடில் கே.கே.98 மீனவர் கூட்டுறவு விற்பனை சங்கமானது ஆரம்பிக்கப்பட்டு, தற்போது வரை 2016 உறுப்பினர்களை கொண்டு செயல்பட்டு வருகிறது. இதில் 2 ஆயிரம் மீனவர்களுக்கு மீன்பிடி உரிமம் வழங்கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 14ம் தேதி முதல் ஏப்ரல் மாதம் 15ம் தேதி வரை மீன்பிடி உரிமங்கள் புதுப்பிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. மேற்கண்ட மீன்வர் கூட்டுறவு விற்பனைச் சங்கமானது அதன் துணை விதிகளின்படி, விவகார எல்லைகளாக கொண்டுள்ளது.

அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டம் அஞ்செட்டி தாலுகா தொட்டமஞ்சி தரப்பு, பிலிகுண்டு பகுதியானது காவேரி ஆற்று பகுதி மேற்படி சங்க விவகார எல்லைக்குள் வருவதால், அச்சங்கத்தை சார்ந்த மீன்பிடி உரிமத்தை புதுப்பிக்காத மீன்வர்கள் புதுப்பித்திடவும், மேலும் மேற்கண்ட சங்க விவகார எல்லைக்குட்பட்ட மீன்வர்கள் தங்களது இருப்பிட சான்றுடன் வருகிற செப்டம்பர் மாதம் 15ம் தேதி மாலை 4 மணிக்குள் புதிய மீன்பிடி உரிமத்திற்காக சேலம் மாவட்டம் மேட்டூர் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் விண்ணபித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேற்கண்ட விவகார எல்லைக்கு உட்படாத இடங்களில் இருந்து வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும், விவரங்களுக்கு மீன்வளத்துறை உதவி இயக்குநர், மேட்டூர் அணை பார்க் எதிரில், கொளத்தூர் ரோடு, மேட்டூர் அணை. தொலைபேசி எண். 04298&244045 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

# "ஏற்ற கதாபாத்திரங்களுக்கு பெருமை சேர்த்தவர் சௌகார் ஜானகி"- தினகரன் புகழஞ்சலி



சென்னை, ஆக.22-

'தான் ஏற்ற கதாபாத்திரங்களுக்கு பெருமை சேர்த்தவர் சௌகார் ஜானகி' என்று அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள இரங்கல் குறிப்பில், "தமிழ்த் திரையுலகின் தனித்துவமிக்க பழம்பெரும் நடிகையும், திரைப்படத் துறையில் மட்டுமின்றி நாடகத் துறையிலும் கோலோச்சி, தனது முத்திரையைப் பதித்தவருமான பத்மஸ்ரீ சௌகார் ஜானகி இயற்கை எய்திய செய்தி மிகுந்த வேதனையையும் வருத்தத்தையும் அளிக்கிறது.

தமிழ், தெலுங்கு, மலையாளம் எனப் பல்வேறு மொழிகளில் தான் ஏற்ற கதாபாத்திரங்கள் அனைத்துக்கும் பெருமை சேர்த்த சௌகார் ஜானகியை இழந்து வாடும் குடும்பத்தினர், உறவினர்கள், ரசிகர்கள் மற்றும் சக திரையுலகினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

# கிருஷ்ணகிரியில் டிட்டோஜாக் சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்




கிருஷ்ணகிரி, ஆக.22-

கிருஷ்ணகிரியில் டிட்டோஜாக் சார்பில் நேற்று மாலை கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடந்தது. கிருஷ்ணகிரி வட்டார கல்வி அலுவலகம் முன்பு, நேற்று மாலை தமிழ்நாடு தொடக்கக்கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு (டிட்டோஜாக்) சார்பில், 20 அம்ச கோரிக்கைகளை வலியறுத்தி கவன ஈர்ப்பு கோரிக்கை முழக்க ஆர்ப்பாட்டம் நடந்தது. இந்த ஆர்ப்பட்டத்திற்கு ஹென்றி பவுல் தலைமை வகித்தார். பாஸ்கரன், வளன்ராஜ், மகளிர் வலையமைப்பு செயலர் ரெஜ்லின், வேதவதி, டெய்சிராணி, லாசிமாபேகம், மகளிர் அமைப்பு செயலர் சகாயராணி, ராதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். டிட்டோஜாக் மாவட்ட பொருளாளர் சேகர் சிறப்புரை ஆற்றினார்.

இதில், ஆசிரியர்கள் ராவணன், நாராயணசாமி, தமிழ் செல்வன், அறிவரசி, முகமது சாலியா, பிரசன்னா, சியாம் குமார், அறிவரசி உள்பட பலர் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்தபடி தமிழ்நாட்டில் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஆறு லட்சத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், அரசு ஊழியர்களின் பாதிப்பினைக் களைந்திடும் வகையில், பங்களிப்பு இல்லாத பழைய ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் அமல்படுத்த வேண்டும். தமிழக அரசின் தற்போதைய நிதிநிலை அறிக்கையில், கடந்த அரசால் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.11,000 கோடி மற்றும் ஏற்கனவே நடப்பில் உள்ள ஓய்வூதியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.3,000 கோடி ஆக மொத்தம் ரூ.14,000 கோடி நிதிக்குறைப்பு ஆசிரியர்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கல்விக்கான நிதி ஒதுக்கீடு ரூ.2,500 கோடி கடந்த ஆண்டைவிட குறைக்கப்பட்டுள்ளது. இந்நிதிக்குறைப்பினை சீர் செய்து முழுமையான நிதி ஒதுக்கீட்டினை வழங்கிட வேண்டும். புதிய அரசு பழைய ஓய்வூதியத்தை அமல்படுத்தும் வரையிலும், ஜிகிறிஷி திட்டத்திற்கான உரிய விதிமுறைகளை வெளியிட்டு முழுமையாக நடைமுறைப்படுத்திட வேண்டுகிறோம்.

இடைநிலை ஆசிரியர்களுக்கு கடந்த இரண்டு ஊதியக்குழுக்கள் ஏற்படுத்தியுள்ள கடுமையான பாதிப்பினைக் கருத்தில் கொண்டு அவர்களுடைய ஊதிய முரண்பாடுகளைக் களைந்து, 01.01.2006 முதல் மத்திய அரசு ஆசிரியர்களுக்கு இணையான ஊதியத்தை வழங்க வேண்டும். தற்போது சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வு தாள் மி, தாள் மிமி எழுதியுள்ள ஆசிரியர்களுக்கு, அவர்களின் பணி க்காலத்தின் அடிப்படையில் ஆண்டுக்கு ஒரு மதிப்பெண் என்ற அடிப்படையில் வெயிட்டேஜ் மதிப்பெண்களை வழங்க வேண்டும். தேர்வு எழுதிய ஆசிரியர்களின் உயர்கல்வித் தகுதியினைக் கருத்தில் கொண்டு கூடுதல் கல்வித்தகுதிக்கும், கூடுதல் வெயிட்டேஜ் மதிப்பெண்கள் நிர்ணயம் செய்து வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட 20 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன கோஷங்களை எழுப்பினர்.



■ சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நேற்று (21.08.2026) விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ் தலைமையில் நடைபெற்றது. உடன் கூடுதல் ஆட்சியர்(வ) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ்,மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள் உட்பட பல்வேறு துறைகளை சார்ந்த முதன்மை அலுவலர்கள், விவசாயிகள் ஆகியோர் உள்ளனர்.



■ மதுரை மாநகராட்சி, மண்டலம்-3, துரைச்சாமி நகர் பகுதியில் செயல்பட்டு வரும் கழிவு நீரேற்று நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.





■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது.




■ செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், நேற்று (21.08.2026) ஓய்வூதியதாரர்களுக்கான குறை தீர்க்கும் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் மரு.மு.வீரப்பன், கலந்துகொண்டு, ஓய்வூதியதாரர்களின் குறைகளை கேட்டறிந்தார். உடன் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.



■ மதுரை மாநகராட்சி, மண்டலம்-3, வேல்முருகன் நகர் பகுதியில், ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., பொதுமக்கள் தினந்தோறும் குப்பைகளை மாநகராட்சி வாகனங்களில் வழங்கும் போது அவற்றை தரம் பிரித்து வழங்குவது தொடர்பாக எடுத்துரைத்தார்.



■ செங்கல்பட்டு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் வாயிலாக செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், நேற்று (21.08.2026) நடைபெற்ற சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாமில் வேலைநாடுநர்களுக்கான பணி நியமன ஆணைகளை மாவட்ட ஆட்சியர் மரு.மு.வீரப்பன், வழங்கினார். உடன் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.

# போதைப்பொருள் தடுப்பு மற்றும் கிராம விழிப்புணர்வு குழு கூட்டம்

மதுரை, ஆக.22–

மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தேவநாதன் தலைமையில், ஒத்தக்கடை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அல்ட்ரா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் போதைப்பொருள் தடுப்பு குழு கூட்டம் நடைபெற்றது. மாணவ, மாணவிகளுக்கு போதைப்பொருட்களை பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து விரிவான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் ஊமச்சிகுளம் உட்கோட்ட துணைக் கண்காணிப்பாளர் (பொறுப்பு) நாகராஜன், கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து, மேலூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வெள்ளரிப்பட்டி கிராமத்தில் உள்ள பாரி திருமண மண்டபத்தில் கிராம விழிப்புணர்வுக் குழு கூட்டம் நடைபெற்றது. இதில் பொதுமக்களின் குறைகள் கேட்டறியப்பட்டு, அவற்றுக்கு உரிய விளக்கங்கள் அளிக்கப்பட்டன. கூட்டத்தில் மேலூர் உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் சிவக்குமார் மற்றும் மேலூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் சரவணன் ஆகியோர் கலந்து கொண்டு விழிப்புணர்வு உரையாற்றினர்.




# ரயில்வே சுரங்கப்பாதைத் திட்டத்திற்கு கிராம மக்கள் எதிர்ப்பு

விருதுநகர், ஆக.22–

விருதுநகர் மாவட்டம், நரிக்குடி ஒன்றியத்துக்கு உட்பட்ட டி.கடம்பன்குளம் கிராமத்தில் உள்ள ரயில்வே கேட்டின் இடத்தில் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, கிராம மக்கள் மானாமதுரை ரயில்வே மூத்த பகுதி பொறியாளரிடம் மனு அளித்தனர். அந்த மனுவில், ரயில்வே கேட்டின் இருபுறங்களிலும் கண்மாய்கள் இருப்பதால் மழைக்காலங்களில் சுரங்கப்பாதையில் தண்ணீர் தேங்கி போக்குவரத்து பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாகத் தெரிவித்துள்ளனர். மேலும், விவசாயிகள், மாணவர்கள், முதியவர்கள் மற்றும் பொதுமக்களின் அன்றாடப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதுடன், கனரக மற்றும் அவசரகால வாகனங்கள் செல்வதிலும் சிரமம் ஏற்படும் எனக் குறிப்பிட்டுள்ளனர். எனவே, பொதுமக்களின் நலனைக் கருத்தில்கொண்டு சுரங்கப்பாதைத் திட்டத்தை மறுபரிசீலனை செய்து, அதனைச் செயல்படுத்தாமல் தற்போதைய ரயில்வே கேட்டைத் தொடர்ந்து பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கண்மாய், இடுகாடு ஆக்கிரமிப்பு விவகாரம்: மாவட்ட எல்லைக் கல்லை மாற்றி அமைத்ததாக புகார் முதலமைச்சருக்கு பொதுமக்கள் கோரிக்கை மனு

விருதுநகர், ஆக.22–

விருதுநகர் மாவட்டம் திருச்சுழி வட்டம், நரிக்குடி பஞ்சாயத்திற்கு உட்பட்ட டி. கடபன்குளம் கிராம மக்கள் பாரம்பரியமாகப் பயன்படுத்தி வரும் சின்னக்கண்மாய் மற்றும் இடுகாட்டுப் பகுதியை பக்கத்து கிராமத்தினர் ஆக்கிரமிக்க முயல்வதாகக் கூறி, தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்குப் பொதுமக்கள் புகார் மனு அளித்துள்ளனர்.

பின்னணி மற்றும் குற்றச்சாட்டு: டி. கடபன்குளம் கிராமத்தில் சுமார் 25 பட்டியலின (தேவேந்திரகுல வேளாளர்) குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்கள் நீண்டகாலமாகப் பயன்படுத்தி வரும் சின்னக்கண்மாய் மற்றும்







இடுகாட்டுப் பகுதிக்கு, பக்கத்து மாவட்டமான சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒன்றியத்தைச் சேர்ந்த சின்ன கண்ணனூர் கிராமத்தைச் சேர்ந்த சிலர் உரிமை கோரி வருவதாகக் கூறப்படுகிறது. மேலும், அப்பகுதி மக்களை மிரட்டி அச்சுறுத்துவதாகவும் கிராம மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

அதிகாரிகள் முன்னிலையில் அமைதிப் பேச்சுவார்த்தை: இப்பிரச்சினை தொடர்பாக மானாமதுரை மற்றும் திருச்சுழி வட்டாட்சியர்கள் முன்னிலையில் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இருப்பினும், சின்ன கண்ணனூர் கிராமத்தைச் சேர்ந்த சிலர் அதிகாரிகளைத் தவறாகப் பயன்படுத்தி, தங்களுக்குச் சாதகமாகச் செயல்படுவதாகவும், இரு மாவட்ட எல்லைக் கற்களை மாற்றி அமைத்துள்ளதாகவும் டி. கடபன்குளம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

பொதுமக்கள் விடுத்துள்ள கோரிக்கை: டி. கடபன்குளம் கிராமத்திற்குச் சொந்தமான சின்னக்கண்மாய் மற்றும் இடுகாட்டுப் பகுதியை முழுமையாக மீட்டுத் தர வேண்டும். தவறாக மாற்றி அமைக்கப்பட்ட மாவட்ட எல்லைக் கற்களைச் சீரமைக்க உரிய கள ஆய்வு நடத்தப்பட வேண்டும். அப்பகுதியில் வசிக்கும் 25 பட்டியலினக் குடும்பங்களுக்கும் தகுந்த பாதுகாப்பு வழங்க வேண்டும். இப்பிரச்சினையில் தமிழ்நாடு முதலமைச்சர், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் மற்றும் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ஆகியோர் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பொள்ளாச்சி: அரிய வகை நோயால் 6 மாத குழந்தை பாதிப்பு - ரூ.16 கோடி செலவாகும் என்பதால் பெற்றோர் தவிப்பு

பொள்ளாச்சி, ஆக.22–

அரிய வகை நோயால் பாதிக்கப்பட்ட 6 மாத பெண் குழந்தைக்கு மரபணு சிகிச்சை அளிக்க, ரூ.16 கோடி செலவாகும் என்பதால் அக்குழந்தையின் பெற்றோர் தவித்து வருகின்றனர்.

பொள்ளாச்சி புளியம்பட்டி மாதா நகரை சேர்ந்தவர் மணிகண்டன். இவரது மனைவி பிரியங்கா. இவர்களுக்கு ஆருத்ரா என்ற 6 மாத பெண் குழந்தை உள்ளது. இக்குழந்தை அரிய வகை மரபணு நோயான முதுகெலும்பு தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த குழந்தைக்கு உயிர்காக்கும் சிகிச்சைக்கு தேவையான நிதியை திரட்டுவதற்கு அவரது பெற்றோர் அரசின் உதவியை கேட்டு பொள்ளாச்சி சார் ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்தனர்.

இது குறித்து குழந்தையின் பெற்றோர் கூறியதாவது: எங்களது 6 மாத பெண் குழந்தை ஆருத்ராவுக்கு திடீரென கால் செயல் இழப்பு ஏற்பட்டது. மருத்துவ பரிசோதனையில் அரிய வகை மரபணு நோயான முது கெலும்பு தசை சிதைவு நோய் என தெரியவந்தது. இது முதுகு தண்டில் உள்ள இயக்க நரம்பு செல்களை பாதித்து, குழந்தையின் தசைகளை படிப்படியாக பலவீனமடைய செய்யும். உடல் இயக்கதிறனும் குறையும்.

இந்த நோய் படிப்படியாக தீவிரமடைந்து உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும். பிஞ்சு வயதிலேயே எங்கள் குழந்தை கொடிய நோயுடன் போராடி வருவது மிகுந்த வேதனையையும், கவலையையும் ஏற்படுத்தி உள்ளது. மருத்துவ பரிசோதனை மற்றும் மருத்துவர்களின் ஆலோசனை அடிப்படையில் மரபணு சிசிக்சைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தற்போது குழந்தை ஆருத்ரா பெங்களூரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். சிகிச்சைக்கான செலவு ரூ.16 கோடி ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வளவு பெரிய தொகையை எங்களால் ஏற்பாடு செய்ய முடியாது. எனவே அரசின் உதவியை கேட்டுள்ளோம். இதுகுறித்து அரசின்கவனத்துக்கு கொண்டு செல்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் திடக்கழிவு மேலாண்மை தொடர்பான மாவட்ட அளவிலான உறுதிமொழி

நீலகிரி, ஆக.22–

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், திடக்கழிவு மேலாண்மை தொடர்பாக, மாவட்ட அளவிலான உறுதி மொழி ஏற்றுக்கொள்ளும் நிகழ்வு மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது:- தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலின் படி, இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில், நீலகிரி மாவட்டத்தில் பொதுமக்களிடம் திடக்கழிவு மேலாண்மை விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக மாவட்ட அளவிலான ஒருங்கிணைந்த உறுதிமொழி மற்றும் தூய்மைப் பணிகள் (Mass Cleaning) அந்த வகையில், நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு



அலுவலகங்கள், அரசு மற்றும் தனியார் பள்ளிகள், கல்லூரிகள், மேற்கொள்ளப்படுகிறது. அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள், பொதுத்துறை வங்கிகள், காவல் நிலையங்கள், சுற்றுலா தலங்கள், உணவகங்கள், வணிக வளாகங்கள், சந்தைகள், பொது இடங்கள் உள்ளிட்ட அனைத்து பொது மற்றும் தனியார் நிறுவனங்களிலும் உள்ள அனைவரும் திடக்கழிவு மேலாண்மை விழிப்புணர்வு உறுதிமொழியினை ஏற்றுக் கொண்டனர். மேலும், தங்களது பகுதியில் உள்ள வளாகங்களில் தூய்மைப்பணிகள் (Mass Cleaning) மேற்கொண்டு சேகரிக்கப்பட்டு தரம் பிரிக்கப்பட்ட குப்பைகளை நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சிகள் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்பினர் பெற்றுக் கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம் திடக்கழிவு மேலாண்மையில் சிறப்பாக இருப்பதற்கு நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் எனவும், மேலும் நமது வீட்டில் குப்பைகளை முறையாக தரம் பிரித்து தூய்மைப்பணியாளர்களிடம் வழங்க வேண்டும் என தெரிவித்தார். அதனை தொடர்ந்து, நீலகிரி மாவட்டத்தில் திடக்கழிவு மேலாண்மை தொடர்பாக பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட இலச்சினை (LOGO) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வெளியிட்டார். மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தூய்மையினை மேற்கொண்டார். இந்நிகழ்வின் போது, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர் , மாவட்ட வருவாய் அலுவலர் வாசுகி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) லோகநாயகி உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161